DINAMALAR

PAGE NO: 04

DATE: 21.12.2023

# விக்ஷித் பாரத் சங்கல்ப் - 2047 மாரத்தான்

## அமைச்சர் துவக்கி வைப்பு

**புதுச்சேரி, டிச. 21–**

புதுச்சேரி பல்கலைக் கழக சார்பில், விக்ஷித் பாரத் சங்கல்ப் 2047 மாரத்தான் ஓட்டத்தை உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் துவக்கி வைத்தார்.

விக்ஷித் பாரத் சங்கல்ப் 2047 (வளர்ந்த இந்தியா) திட்டத்தை பிரபலப்படுத்துவதன் ஒரு பகுதியாக, புதுவைப் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை சார்பில், மாரத்தான் ஓட்டம் ராஜிவ் காந்தி மைதானத்தில் நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் (பொ)தரணிக்கரசு தலைமை தாங்கினார். விளையாட்டுத் துறை இணை இயக்குனர் பிரவீன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பங்கேற்று, மராத்தான் ஓட்டத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின் அவர், பேசுகையில், விக்ஷித் பாரத் 2047ன் குறிக்கோளை அடைய இளைஞர்களின் பங்களிப்பு மற்றும் தேவை அதிகளவில் உள்ளது. பல்கலைக்கழகத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் திறமை, அரசு முன்னெடுக்கும் திட்டங்கள் பங்களிப்பு குறித்து' பேசினார்.

ஏற்பாடுகளை இயக்குனர் இளையராஜா செய்திருந்தார். மாரத்தான் ஓட்டத்தில் பேராசிரியர்கள், கல்வியாளர்கள், 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.




■ புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில், விக்சித் பாரத் சங்கல்ப் 2047 மாரத்தான் ஓட்டத்தை உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் துவக்கி வைத்தார்.

DINAKARAN

PAGE NO: 16

DATE: 21.12.2023

புதுவை பல்கலைக்கழகத்தில்

# விக்சித் பாரத் மாரத்தான் ஓட்டம்



புதுவை பல்கலைக்கழகத்தில் நடந்த மாரத்தான் ஓட்டத்தை அமைச்சர் நமச்சிவாயம் தொடங்கி வைத்தார். அருகில் துணைவேந்தர் (பொ) தரணிக்கரசு.

புதுச்சேரி, டிச. 21: புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள புதுவை பல்கலைக்கழக விளையாட்டுத்துறை சார்பில் விக்சித் பாரத் 2047 திட்டத்தை பிரபலப்படுத்துவதன் ஒரு பகுதியாக மாரத்தான் ஓட்டம் பல்கலைக்கழகத்தில் உள்ள ராஜீவ் காந்தி மைதானத்தில் நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொ) தரணிக்கரசு தலைமை தாங்கினார். விளையாட்டு துறையின் இணை இயக்குனர் பிரவீன் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் கலந்து கொண்டு மாரத்தான் ஓட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். இந்த மாரத்தான் ஓட்டத்தில் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இயக்குனர் பேராசிரியர் இளையராஜா ஒருங்கிணைத்திருந்தார். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

DAILY THANTHI

PAGE NO: 09 DATE: 21.12.2023



# புதுவை பல்கலைக்கழகத்தில் மாரத்தான் ஓட்டம்

புதுச்சேரி, டிச.21-

வளர்ச்சியடைந்த இந்தியா-2047 திட்டத்தை பிரபலப்படுத்துவதுதான் ஒரு பகுதியாக புதுவை பல்கலைக்கழக விளையாட்டுத்துறை சார்பில் மாரத்தான் ஓட்டம் பல்கலைக்கழக ராஜீவ்காந்தி மைதானத்தில் நடந்தது. உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், மாரத்தான் ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு ஓடினர். முடிவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் அவர் வழங்கினார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) தரணிக்கரசு, விளையாட்டுத்துறை இயக்குனர் இளையராஜா, இணை இயக்குனர் பிரவீன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.